CHENNAI RAMAPURAM
SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

# எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம், இராமாபுரம், சென்னை - 89.

## அறிவியல் மற்றும் மனிதநேயவியல் புலம், தமிழ்த்துறை

வெளியிடும்

படித்ததும் படைத்ததும்
மலர் - 1





# படித்ததும் படைத்ததும்


NAAC A++ | Category 1 with 12B Status | NIRF (2025) Ranked 11th University | QS (2026) World Ranking one among 54 Indian Universities | THE World University Rankings (2025) World Ranking one among 91 Indian Universities | Shanghai Ranking (2025) World Ranking Ranked 8-9 in Indian Universities | nature INDEX (2025) World Ranking one among 18 Indian Universities | UI GreenMetric (2024) World Ranking one among 3 Indian Universities

srm.rmp.fsh srmistfsh_ramapuram fsh.srmrmp.edu.in FOR ENQUIRIES : 1800 102 1525

# எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம், இராமாபுரம், சென்னை - 89.

## அறிவியல் மற்றும் மனிதநேயவியல் புலம்,
## தமிழ்த்துறை

வெளியிடும்

படித்ததும் படைத்ததும்
மலர் - 1

# படித்ததும் படைத்ததும்

# படித்ததும் படைத்ததும் மலர் – குழுவினர்

| | | |
|---|---|---|
| **நிர்வாகத் தலைவர்கள்** | - | டாக்டர் **ஆர். சிவகுமார்,** தலைவர்,<br>எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும்<br>தொழில்நுட்பவியல் நிறுவனம்,<br>இராமாபுரம்,சென்னை – 89.<br>திருமிகு. **சி. நிரஞ்சன்**, இணைத் தலைவர்,<br>எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும்<br>தொழில்நுட்பவியல் நிறுவனம்,<br>இராமாபுரம்,சென்னை – 89. |
| **நிறுவனப் பொறுப்பாளர்கள்** | - | முனைவர் **என். சேதுராமன்**, தலைமை இயக்குநர்,<br>முனைவர் **கே.வி. நாராயணன்,** இணை இயக்குநர்,<br>எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும்<br>தொழில்நுட்பவியல் நிறுவனம். |
| **முதன்மை ஆலோசகர்** | - | முனைவர் **S. திருமகன்**, புல முதன்மையர்,<br>எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும்<br>தொழில்நுட்பவியல் நிறுவனம். |
| **ஆலோசகர்கள் குழு** | - | முனைவர் **ஜே. திலீபன்,** துணை முதல்வர்<br>(நிர்வாகவியல்),<br>முனைவர் நா. **புகழேந்தி,** துணை முதல்வர்<br>(கல்வியியல்),<br>எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும்<br>தொழில்நுட்பவியல் நிறுவனம்.<br>முனைவர் **ஜெ. ஜெபீலா ஷெர்லின்**,<br>துறைத்தலைவர்,<br>மொழி, பண்பாடு மற்றும் சமுதாயம் **- துறை.** |
| **முதன்மை ஆசிரியர்கள்** | - | முனைவர் **கு.நாகம்மாள்,**<br>முனைவர் **ஆ. கவிதாராணி,**<br>உதவிப் பேராசிரியர்கள் (தமிழ்) |
| **வடிவமைப்பாளர்** | - | முனைவர் **ம. திவாகர்,**<br>உதவிப் பேராசிரியர் (தமிழ்) |
| **மாணவத் தொகுப்பாசிரியர்** | - | மாணவி **கி. தர்ஷினி,**<br>இரண்டாமாண்டு, BCom A & F |

# படைப்பின் ஊற்று வெளி

சென்னை, இராமாபுரம், எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் மானுடவியல் புலம், தமிழ்த்துறையின் சார்பாக **“படித்ததும் படைத்ததும்”** எனும் தலைப்பில் (2025 - 2026) முதல் பதிப்பாகச் சிறப்பிதழ் - மலர் ஒன்று செம்மையாக வெளியிடப்படுகிறது. அவ்வாறு வெளிவரும் இவ்விதழ் தமிழ்த்துறை நிகழ்த்திய பாரதியார் முத்தமிழ் விழாவில் முதன் முதலில் (11/12/2025) அன்று வெளியிட்டதனைப் இத்தருணத்தில் மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

இச்சிறப்பிதழ் வெகுசிறப்பாக வெளிவருவதற்கு முழுமுதற் காரணமாயிருந்த எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் மாண்பமை **டாக்டர் ஆர். சிவக்குமார்** ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொலைநோக்கு திட்டமிடலோடு பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்துவரும் எஸ். ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நிர்வாக இணைத் தலைவர் **திருமிகு.சி. நிரஞ்சன்** ஐயா அவர்களுக்கு உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களின் நற்செயலினை வரவேற்றுப் போற்றக்கூடிய எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் **முனைவர் என்.சேதுராமன்** ஐயா அவர்களுக்கும் எஸ்.ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் இணை இயக்குநர் **முனைவர் கே. வி. நாராயணன்** ஐயா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக இவ்விதழுக்கான ஓர் அடித்தளத்தை அமைத்துத் தந்தவர் எங்கள் பேராசானாகவும் முன்மாதிரியாகவும் விளங்ககூடிய மதிப்பிற்குரிய புல முதன்மையர் முனைவர் S. **திருமகன்** ஐயா அவர்கள் அப்பெருந்தகையினை வணங்கி வரவேற்று மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

அனுதினமும் துறைசார்ந்த நற்பணியைக் கருத்தில்கொண்டு எப்பொழுதும் பேராதரவை நல்கிக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய நிர்வாகவியல் துணை முதல்வர் **முனைவர் ஜெ.திலீபன்** ஐயா அவர்களுக்கும் அவரோடு இணைந்து செயலாற்றக்கூடிய இவ்விதழுக்கான அத்துணை உதவிகளையும் பல்வேறு வகையில் நல்கிய கல்வியியல் துணை முதல்வர் **முனைவர் நா. புகழேந்தி** ஐயா அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றோம்.

எப்பொழுதும் எல்லா ஆக்கப்பணிகளுக்கும் பக்கபலமாக இருந்து வருகின்ற எங்கள் துறையின் அன்பிற்கினிய பேராசிரியர் துறைத்தலைவர் **முனைவர் ஜெ.ஜெபீலா ஷெர்லின்** அவர்களுக்கும் இத்தருணத்தில் உள்ளம் கனிந்த நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறோம்.

இவ்விதழ் குறித்து மாணவர்களிடம் தெரிவித்தபொழுது உண்மையிலேயே ஆர்வத்தோடு தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொண்டனர். அதனை உறுதிப்படுத்தும் விதமாகச் சிறந்த படைப்புகளையும் எழுதி அளித்துள்ளார்கள். அப்படைப்புகளைப் படிக்கின்ற பொழுது ஒவ்வொரு மாணவர்களுக்கும் கற்றலோடு தனிப்பட்ட எழுத்தாற்றல் இருப்பதையும் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். அதற்கான ஒரு வாயிலை இவ்விதழ் திறந்து வைத்துள்ளது. அத்தகைய ஆர்வமும் திறமும் படைத்த அன்பிற்கினிய மாணவர்களை உளமாறப் பாராட்டி வாழ்த்திப் பெருமை கொள்கின்றோம்.

அதேபோல, மற்ற துறையைச் சார்ந்த துறைத்தலைவர்களும் பேராசிரியர்களும் மற்றும் தமிழ்த்துறை பேராசிரியர்களும் இவ்விதழுக்கான பணியில் தம்மை அக்கறையோடு இணைத்துக் கொண்டு செம்மை மிகு படைப்புகளையும் படைத்தளித்து ஒத்துழைப்பு நல்கி உள்ளம் குளிரச் செய்தார்கள் அதனை நன்றியோடு பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும், இவ்விதழ்ப்படைப்பு இத்துணை செம்மையாக வெளிவருவதற்கு உறுதுணையாகயிருந்து எங்களோடு ஒத்துழைப்பினை நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மீண்டும் உங்கள் ஆதரவோடு இந்த இதழ் அடுத்தடுத்து தொடர்ந்து வெளிவர உள்ளது. அதற்கான அடுத்தகட்ட படைப்புகளையும் எதிர்நோக்கிய ஆவலோடு….

| வ. எண். | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 01. | படித்ததில் பிடித்தது | 6 – 7 |
| 02. | கல்வியே ஒளி விளக்கு | 8 – 9 |
| 03. | படித்தேன் – படைத்தேன் | 10 |
| 04. | சிந்தனைத் துளிகள் | 11 |
| 05. | அப்துல் கலாமின் சிந்தனைத் துளிகள் | 12 – 13 |
| 06. | அறிவோம் தமிழ் வருடங்கள் | 14 |
| 07. | பார்த்து இரசிப்போம் | 15 |
| 08. | இயற்கை கொலை முயற்சிகள் மறையட்டும் | 16 – 17 |
| 09. | மாலை நேரம் (சிறுகதை) | 18 – 19 |
| 10. | வள்ளலார் குறிப்பிடும் மனிதன் தவிர்க்க வேண்டிய குற்றங்கள் | 20 – 21 |
| 11. | தமிழே என் உறவே! | 22 |
| 12. | பெண் எப்போது பெண்ணாகிறாள் | 23 – 24 |
| 13. | கொலை – ஒரு கைவிடப்பட்ட சாட்சியம் (சிறுகதை) | 25 – 26 |
| 14. | விழுமியம் போற்றும் தமிழ்மொழிக் கல்வி | 27 – 31 |
| 15. | GenZ தலைமுறை | 32 |
| 16. | சேலை – பாரம்பரியம் | 33 – 36 |
| 17. | காலத்தை மீறும் காதல் (சிறுகதை) | 37 – 38 |
| 18. | தமிழ்ப்பொருள் அகராதி | 39 |
| 19. | நாங்களும் மனிதர்கள் தான் | 4 – 42 |
| 20. | நிறமும் சுவையும் | 43 – 44 |





**முனைவர் S. திருமகன்,**

**புல முதன்மையர்,**

**அறிவியல் மற்றும் மனிதநேயவியல் புலம்,**

**எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்,**

**இராமாபுரம், சென்னை – 89.**

## படித்ததில் பிடித்தது

- இரண்டு அடி கொடுத்தால்தான் திருந்துவீர் என்றால்,
  வள்ளுவரிடம் அந்த இரண்டு அடியை
  வாங்கிக்கொள்ளுங்கள்…

  **- கவிஞர் அறிவுமதி**



- கால் செய்த புண்ணியம் நூலகம் செல்வது!
  கை செய்த புண்ணியம் நூல் தேடி எடுப்பது!
  கண் செய்த புண்ணியம் நூல்களைப் படிப்பது!
  கடைசி புண்ணியம் கடைப் பிடித்திடுவது!!

  **- கவிஞர் சுப்பு ஆறுமுகம்**

- தேராட்டம் காரினிலே ரொம்ப திமிரோடு போரவங்களே! – எங்க
  ஏரோட்டம் நின்னுப்போனா!! உங்க காரோட்டம் என்னவாகும்?

  **- நாராயணக் கவி**

- கிரிகெட்டின் கிருஷ்ண பகவான் – அம்பயர்
  அதர்மம் ஆயிரமாய்க் கத்தினாலும்
  தர்மத்தின் ஒரே வார்த்தையில்
  அதர்மம் அடங்கி விடும்.

- படித்தவன் பாடம் நடத்துகிறான்;

  படிக்காதவன் பள்ளிக்கூடம் நடத்துகிறான்.

- தீப்பெட்டியும் தீக்குச்சியும் உரசியது,

  பெட்டி எரியவில்லை! குச்சி எரிந்தது!! – காரணம்

  குச்சிக்குத் தலைக்கனம் அதிகம்.

  **- கவிஞர் அப்துல்காதர்**

- கல்வியின் வேர்கள் கசப்பானவை – ஆனால்

  அதன் கனிகள் இனிப்பானவை.

  **- அரிஸ்டாட்டில்**

- நியாயமான துணிவு இலட்சம் பங்கு அதிர்ஷ்டத்திற்குச் சமம்.

  **- விவேகானந்தர்**

- நிறத்தால் முன்னேற்றம் நிர்ணயிக்கப்படாது – உன்

  திறத்தால் முன்னேற்றம் நிர்ணயிக்கப்படும்.

□□□□

# கல்வியே ஒளி விளக்கு!



**முனைவர் ஜெ.திலீபன்,**

**துணை முதல்வர் (நிர்வாகவியல்)**

**அறிவியல் மற்றும் மனிதநேயவியல் புலம்,**

**எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்,**

**இராமாபுரம், சென்னை – 89.**

காட்டிலும் மேட்டிலும் மலைகளிலும் குகைகளிலும் விலங்குகள் போன்று வாழ்ந்த மனிதன் விவரம் தெரிந்து, கல்வி என்ற ஆயுதத்தைக் கண்டுபிடித்த போதுதான் வாழ்க்கையில் விடிவுதோன்றியது. எத்தகைய வறுமைப் பிடியில் ஒருவன் இருந்தாலும், கல்வி என்ற ஒன்றே பலத்தையும் தன்னம்பிக்கையையும் நல் அறிவையும் வளர்த்து, வறுமையைக் கெடுக்கும்; வளமையைக்கொடுக்கும்!

அத்தகைய மேன்மை மிகு கல்வியினை மாணவர்கள் இளமைப் பருவத்தில் தவறவிடாமல் கற்க வேண்டியவற்றைக் கற்று, நல்ல வழியில் செல்ல வேண்டியது அறிவுடைமையாகும். மனிதனுக்குக் கல்வி அறிவு வெளிச்சம் தந்த போதுதான் உலகின் இருள் நீங்கி, இன்று உலகில் வியத்தகு நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால், விண்ணகத்திலும் மண்ணகத்திலும் மனிதன் ஆட்சி செலுத்திக் கொண்டு ஒளிர்கிறான். இவையாவும் அறிவுடையோரின் செயல்களால் விளைந்த அற்புத நிகழ்வுகளே!

ஆனால், இன்றைய மாணவர்கள் கற்றநெறியில் செல்லாமல் குற்ற வழியில் செல்லும் போக்கு அதிகரித்திருப்பது வருத்தத்திற்குரிய செயலாகும். எனவே, மாணவர்கள்-பெற்றோர்கள் மற்றும் கற்றவர்கள், ஆசிரியர்கள் சொல்லுகின்ற அறிவுமிகு கருத்துகளை உள்வாங்கி நடத்தல் வேண்டும்.

ஆதி மனிதர்களைப் போன்று பேதைகளாக இல்லாமல், அறிவுலக மேதைகளாக வருவதற்கு, “போதை” என்ற கொடிய பாதையில் செல்லாமல் நல்வழி நடத்தல் வீட்டிற்கும் நாட்டிற்கும் நலம் பயக்கும்.

இளமைப் பருவம் கிடைத்தற்கு அரிய பருவம். “தீய வழிகளில் செல்லக் கூடிய மோசமான திரைப்படக் காட்சிகள் மூலமாகவே மாணவர்களும் இளைஞர்களும் கற்றுக் கொண்டு படிப்பைப் பாழ் படுத்துவதோடு, மது அருந்துதல், புகைத்தல் போதைப் பொருள்களைப் பயன்படுத்துதல், அதன் மூலம் குற்றச்செயல்களில் ஈடுபடுதல் அதிகரித்து வருகிறது”, எனக் காவல்துறையினர் வருந்துகின்றனர். இது வீட்டுக்கும் நாட்டுக்கும் இழைக்கும் பெரும் கொடுமையாகும்.

உயர்ந்த நோக்கம், உயர்ந்த சிந்தனை, உயர்ந்த சான்றோர்கள் கூறிய நூல்களைக் கற்றல், அதன் வழி நடத்தலே அறிவுசார் சமூகம் உருவாக வழி வகுக்கும். எனவே அன்புக்குரிய மாணவர்களே, கற்க வேண்டிய வயதில் கற்று, உயர் பொறுப்புகளைப் பெற்று பெற்றோருக்கும். கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமைத் தேடித்தருவதோடு நீங்களும் பெருமை தேடிக்கொள்ளுங்கள்!

□□□□

## படித்தேன் - படைத்தேன்



**முனைவர் நா. புகழேந்தி,**

**துணை முதல்வர் (கல்வியியல்)**

**அறிவியல் மற்றும் மனித நேயவியல் புலம்,**

**எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்,**

**இராமாபுரம், சென்னை – 89.**

படித்தேன் நான் —
அகரம் முதல் ஆகாயம் வரை,
அறிவின் ஒளி என்னுள் தீபம் ஏற்றியது.
அந்த தீபத்தின் ஜோதி,
என் உள்ளத்தில் கனவாகப் பரவியது —
அங்கே பிறந்தது படைப்பு,
என் மனம் ஒரு புதிய உலகம் கண்டது.
படிப்பு எனக்கு பக்கங்கள் கொடுத்தது,
படைப்பு எனக்கு பறக்கத் தந்தது.
ஒரு எழுத்து நனைந்தால் — சிந்தனை மலரும்,
ஒரு சிந்தனை நனைந்தால் — உலகம் மாறும்!
படிப்பதின் வழி — வழிகாட்டும் தீபம்,
படைத்ததின் பலன் — பிறருக்கான நம்பிக்கை!
அறிவு உண்டாக, அன்பு உலாவ,
‘படித்ததும் படைத்ததும்’ சேரும் போது — தான்
மனிதம் மலர்கிறது.

**“எங்கள் மதிப்பிற்குரிய  புல முதன்மையர் விதைத்த விதை இந்த இதழ்”**

## சிந்தனைத் துளிகள்



**முனைவர் ஜெ. ஜெபீலா ஷெர்லின்,**

**துறைத்தலைவர், மொழி பண்பாடு மற்றும் சமூகவியல் துறை**

**அறிவியல் மற்றும் மனித நேயவியல் புலம்,**

**எஸ்.ஆர்.எம். அறிவியல்மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்,**

**இராமாபுரம், சென்னை – 89.**

**பெண்ணே!**

**இராணியாக** வாழ நினைத்தால்

**இராஜாவைத்** தேடாதே…

**இராஜ்ஜியத்தைத்** தேடு

**பெண் என்பவள்**…

உடைந்து, அழுது


தன்னைத்தானே தேற்றிய பின்

தன்னை உடைத்தவரிடமே

சிரித்துப் பழகுபவள்

□□□□

# அப்துல் கலாமின் சிந்தனைத் துளிகள்





**நா. சரண்யா**
RA2531204020075
I ISM B SECTION
தொகுப்பாளர்

## 1. கனவுகள் மற்றும் இலக்குகள்

- ❖ கனவு காணுங்கள், ஏனெனில் கனவுகளே உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கின்றன.
- ❖ கடின உழைப்பு எப்போதும் வெற்றி தரும்; சோம்பல் தோல்வியை மட்டுமே தரும்.
- ❖ தோல்வி ஒரு முடிவல்ல, அது ஒரு புதிய தொடக்கம்.
- ❖ வாழ்க்கையில் உயரம் பெறும் வழி — ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக முன்னேறுதல்.

## 2. கல்வி மற்றும் அறிவு

- ❖ கல்வி என்பது மனிதனை மாற்றும் மிக வலிமையான ஆயுதம்.
- ❖ நேர்மை, ஒழுக்கம், உழைப்பு — இவை வாழ்க்கையின் மூன்று அடிப்படை தூண்கள்.
- ❖ உங்கள் கனவுகளை நிஜமாக்க உழைப்பை வழியாக்குங்கள்.
- ❖ நல்ல எண்ணம் கொண்ட மனம் எப்போதும் ஒளிரும்.

## 3. தன்னம்பிக்கை மற்றும் முயற்சி

- ❖ உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேறுங்கள்; சிறிய தடைகள் உங்களைத் தடுக்க முடியாது.
- ❖ தன்னம்பிக்கை கொண்டவர் எதையும் சாதிக்க முடியும்.
- ❖ அறிவைப் பகிர்ந்தால் அது பெருகும் — அதுவே உண்மையான செல்வம்.
- ❖ சவால்களை எதிர்கொள்வதில்தான் நம்முடைய வலிமை வெளிப்படும்.

4. **இளைஞர்கள் மற்றும் நாட்டின் வளர்ச்சி**

- ஒவ்வொரு இளையரும் நாட்டின் எதிர்காலம்.
- நம் நாட்டை மாற்ற வேண்டுமானால், நம்மை மாற்றத் தொடங்க வேண்டும்.
- தோல்வியை வெற்றியின் முதல்படியாக எடுத்துக்கொள்ளுங்கள்.
- உழைப்பு மற்றும் பொறுமை — வெற்றிக்கு வழிகாட்டும் இரட்டைச் சக்கரம்.

5. **மன வலிமை மற்றும் உறுதி**

- உங்கள் மனதில் நம்பிக்கை இருந்தால், கைகள் அதிசயங்களைச் செய்யும்
- கடினமான சூழ்நிலைகளில் தான் உண்மையான திறமை வெளிப்படும்.
- ஒருமுறை இலக்கை நிர்ணயித்தால், அதை அடையும் வரை விடாமுயற்சி விடாதீர்கள்.
- வாழ்க்கை என்பது ஒரு சவால், அதை அஞ்சாமல் எதிர்கொள்ளுங்கள்.

6. **நம்பிக்கை மற்றும் வெற்றி**

- நம்பிக்கை என்பது மனிதனின் மிகப்பெரிய பலம்.
- தன்னம்பிக்கையுடன் உழைத்தால், எந்தத் தடையையும் கடக்க முடியும்.
- சிறிய கனவுகளுக்காக நேரத்தை வீணாக்காதீர்கள்; பெரிய கனவுகள் காணுங்கள்.
- நேர்மையும் உழைப்பும் இருந்தால் வெற்றி தாமதமாகலாம் ஆனால் தவறாது.

7. **வாழ்க்கை நோக்கம் மற்றும் சாதனை**

- உங்கள் வாழ்க்கை ஒரு உதாரணமாக இருக்கட்டும், மற்றவர்களுக்கு ஊக்கமாக இருக்கட்டும்.
- தன்னம்பிக்கை, உறுதி, உழைப்பு — இவை மூன்றும் வெற்றியின் மருந்து.
- பெரிய கனவுகளுக்குப் பெரிய உழைப்பு தேவை.
- நம் வாழ்க்கையின் நோக்கம் — நம்மை மேம்படுத்தி, பிறரை நன்மையால் தொடுவது.

□□□□

# அறிவோம் தமிழ் வருடங்கள்




**முனைவர் ப. சாந்தி,**
**உதவிப்பேராசிரியர் (தமிழ்)**

ஒவ்வொரு நாட்களிலும் இரவு, பகல் வார நாட்கள், மாதங்களைப் போல தமிழ் ஆண்டுகளும் சுழற்சி முறையில் அமைந்துள்ளன. இந்த ஆண்டு வட்டம் எனப்படுவது, அறுபது (60) ஆண்டுகளைக் கொண்டது. இந்த 60 ஆண்டுகளும் நம் தமிழ் நாட்காட்டிகளின் காலக் கணிப்பில் நாம் பயன்படுத்தி வருகின்றோம். இந்த சுழற்சியானது, பிரவ ஆண்டிலிருந்து தொடங்கி அட்சய ஆண்டுடன் நிறைவடையும். இந்த (60) வருடங்கள் மொத்தத்தையும் கீழ்காணுமாறு காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பிரபவ | 13. பிரமாதி | 25.சர்வசித்து | 37. சித்தார்த்தி | 49. பிலவங்க |
| 2. விபவ | 14. விக்கிரம | 26. சர்வதாரி | 38. ரௌத்திரி | 50. கீழக |
| 3. சுக்ல | 15. விசு | 27. விரோதி | 39. துன்மதி | 51. சௌமிய |
| 4. பிரமோதூத | 16.சித்திரபானு | 28. விக்ருதி | 40. துந்துபி | 52. சாதாரண |
| 5. பிரசோற்பத்தி | 17. ராட்சச | 29. கர | 41. விகாரி | 53.விரோதிகிருது |
| 6. ஆங்கிரச | 18. நள | 30. நந்தன | 42. சார்வரி | 54. பரிதாபி |
| 7. ஸ்ரீமுக | 19. பிங்கள | 31. விஜய | 43. பிலவ | 55. பிரமாதீச |
| 8. பவ | 20. காளயுத்தி | 32. ஜய | 44. சுபகிருது | 56. ஆனந்த |
| 9. யுவ | 21. சுபானு | 33. மன்மத | 45.சோபகிருது | 57.ருத்ரோத்காரி |
| 10. தாது | 22. தாரண | 34. துன்முகி | 46. குரோதி | 58. ஏக்தாட்சி |
| 11. ஈஸ்வர | 23. பார்த்திப | 35.ஏர்விளம்பி | 47. விசுவாசுவ | 59. குரோதன |
| 12. வெகு தானிய | 24. விய | 36. விளம்பி | 48. பிரபாவ | 60. அட்சய |

## பார்த்து இரசிப்போம்



**சஞ்சய் பிரசன்னா எஸ். (RA2531204020076), IISM B SECTION**

# இயற்கை கொலை முயற்சிகள் மறையட்டும்



**முனைவர் கு. நாகம்மாள்**
**உதவிப்பேராசிரியர் (தமிழ்)**



பறிக்கப்பட்ட மண்ணால் எடுக்கப்பட்டது ஈரம்....
ஆறு ஏரியெல்லாம் ஊரானது...
அன்றாடம் பருகும் நீர் விலையானது...
ஆரோக்கியம்  விலை மகளிரானது...

மனிதன் நிற்க நிழலில்லாத நிறுவனங்கள்
நிறைய...
அறிவு பெருகியது ஆடம்பரங்கள் வளர்ந்தது...
மாற்றங்கள் வந்தது...
ஆனாலும்...
ஆற்றலற்றுப் போனார்கள் இன்றைய ஆதி
மனிதர்கள்.

மரம் கொன்று வீடாக்கி...
மக்கள் பெருகி விட்ட நகரத்தில்...

மயானங்களின் எண்ணிக்கையில் கூட...
மரங்கள் இல்லாத அவலம் கூடியது.

கொரோனா எனப் பல புதிய… கொடுமைகள் முளைத்து…
அடிமைகளாய் மக்கள் வீட்டில் அடைக்கப்பட்டனர்…
கேட்டை மீறிச் சென்றால் தண்டனைகள் பரிசு…
கேட்க நாதி இல்லாமல் கிடந்தான் கல்லாய்…

இனி ஒரு விதி செய்வோம்…
தனியொருவன் இயற்கையைக் காக்கவில்லையெனில்…
தரணியில் அவனைத் தனித்து வைப்போம்…
தலைமுறைகள் தழைக்கட்டும்…
இயற்கை கொலை முயற்சிகள் மறையட்டும்.

□□□□


# மாலை நேரம்

**(சிறுகதை)**



**தருண் B (RA2531022020022)**
**I B.Sc. AIML B**

இளங்கோவன் தனது சிறுவயதிலிருந்தே தாத்தாவிடம் மிகுந்த பாசத்துடன் வாழ்ந்து வந்தான். இளங்கோவனின் தந்தை மற்றும் தாயார் பட்டணத்தில் மிகுந்த வேலை சுமையுடன் இருந்தமையால், அவனைச் சிறுவயதிலிருந்தே தாத்தாவிடம் வளரவிட்டனர். இளங்கோவனின் பள்ளிப்பருவம் முழுவதும் அவனது தாத்தாவையே சார்ந்து இருந்தது.



காலை எழுந்ததில் இருந்து இரவு உறங்கும் வரை அவனது தாத்தா அவனை அன்பாகவும், அரவணைப்புடனும் வளர்த்து வந்தார். இளங்கோவன் மற்றும் அவனது தாத்தாவிற்கும் இடையிலான உறவை அவரது மாலை நேரக் கதைகள் மற்றும் கவிதைகள் வலுப்படுத்தின. தாத்தாவின் அன்றாட வேலை மிகவும் சிறியது. காலையில் அவனைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வது, பின் மாலையில் வீடு திரும்பி பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு உணவளித்தல், பயிர்களுக்கு நீர்ப் பாய்ச்சுதல், பிறகு மாலை நேர கதைகள் இப்படியே அவனது வாழ்க்கை சென்றது.

இளங்கோவன் பள்ளிப் படிப்பை முடித்ததும், கல்லூரியில் சேர்வதற்குப் பட்டணத்திற்குத் திரும்பினான். அதுவே, இளங்கோவன் தன் தாத்தாவை இறுதியாகப்

பார்த்த நாள். அவன் பட்டணத்திற்கு வந்த பிறகும் அவன் நினைவுகள் தாத்தாவைப் பற்றியே இருந்தது.

பலமுறை கைப்பேசியில் தொடர்பு கொள்ள முடிவு செய்தும் பேச இயலவில்லை. பின் தனது கோடைகால விடுமுறையில் தாத்தாவைப் பார்க்க தயாரானான். அப்போது, நெடுநாள் கழித்து தாத்தாவிடம் இருந்து கைப்பேசிக்கு அழைப்பு வந்தது. ஆனால், இளங்கோவனின் அம்மா எடுத்து தாத்தா இறந்து விட்டதாகச் செய்தி சொல்கிறாள்.

சோகத்தில் ஆழ்ந்த இளங்கோ, ஊருக்கு மாலை நேரமாக வந்து சேர்ந்தான். அப்போது விலங்குகள் மற்றும் பறவைகள் உணவுக்காக வந்தன. பயிர்கள் நீரின்றி வாடின. அதனைக் கண்ட அவன், மறுபடியும் பள்ளிப்பருவத்திற்கே சென்றது போல, "மாலை நேர"கதையைக் கேட்க காத்திருந்தான்.

□□□□

## வள்ளலார் குறிப்பிடும் மனிதன் தவிர்க்க வேண்டிய குற்றங்கள்



**முனைவர் ஆ. கவிதாராணி**

**உதவிப்பேராசிரியர் (தமிழ்)**



வள்ளலார் என அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் அவர்கள் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ் ஞானி மற்றும் உயிர்களிடத்தில் கருணை கொண்ட சமூகச் சீர்திருத்தவாதி. இவர் தன்னுடைய படைப்பான மனுமுறை கண்ட வாசகத்தில் மனுநீதிச் சோழன் என்ற அரசன் தன் மகன் ஓட்டிய தேரில் சிக்குண்டு இறந்த கன்றின் தாய்ப்பசுவினது துயர் துடைக்க இயலாமல் தன்மகனையே தேர்க்காலில் இட்டுக்கொன்றான். அவ்வகையில் அவன் நீதியைக் காப்பாற்றிய பிறகு தன் மகன் இறந்த துயர் தாளாமல் உலகத்தில் வாழும் உயிர்கள் பிறருக்குப் பாவம் செய்தால் அது தனக்கு நேரிடும் எந்த விதிப்படி மனித குற்றங்களைக் பட்டியலிட்டுள்ளார். அவற்றுள் எக்காலத்தும் பொருந்தக் கூடியதாக நான் கருதுபவற்றை இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

1. நல்லோர் மனதை நடுங்க செய்தல்,
2. வலிய வழக்கிட்டு மானம் கெடுத்தல்.
3. தானம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்துதல்.
4. உற்ற சிநேகிதனுக்குக் கலகம் செய்தல்.
5. மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்தல்,
6. குடிமக்களுக்கு வரி உயர்த்துதல்,
7. ஏழைகள் வயிறு எரிய செய்தல்,
8. தர்மம் பார்க்காமல் தண்டனை செய்தல்,
9. உயிர் கொலை செய்பவர்களுக்கு உபகாரம் செய்தல்,

10. களவு செய்வோருக்கு உளவு சொல்லுதல்,
11. பொருளை அபகரித்து பொய் சொல்லுதல்,
12. ஆசை காட்டி மோசம் செய்தல்,
13. வேலை இட்டுக் கூலி குறைத்தல்,
14. பசித்த முகத்தைப் பாராது இருத்தல்,
15. இரந்து கேட்போருக்குப் பிச்சை இல்லை என்று சொல்லல்,
16. கோள் சொல்லி குடும்பத்தைக் கலைத்தல்,
17. நட்டாற்றில் கையை நழுவ விடுதல்,
18. கலங்கி ஒளிந்தோரைக் காட்டிக் கொடுத்தல்
19. குருவை வணங்க கூசி நிற்றல்,
20. பறவைகளைப் பதைக்க கூண்டில் அடைத்தல்,
21. கல்லும் நெல்லும் கலந்து விற்றல்,
22. வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சத்தை அளித்தல்,
23. பகைவர்களின் பயிரினை அழித்தல்,
24. ஆலயக் கதவடைத்து வைத்தல்,
25. தந்தை தாய் மொழியைத் தள்ளி வைத்தல்,
26. தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைதல்.

இவை, காலங்கள் மாறினாலும் உலகம் எவ்வளவு பரபரப்பாக இயங்கினாலும் மனிதன் வாழும் முறை மாறினாலும் விதிகள் மாறுவதில்லை. அவ்வகையில் இந்தச் சமுதாயத்தில் ஒவ்வொரு தனி மனிதனுடைய ஒழுக்கம் முக்கியமானது. அதனால், அனைவரும் இவ்வுலகில் நல் எண்ணங்களுக்கு மரியாதை அளிப்போம்.

□□□□

# தமிழே என் உறவே





**மா. அருண்குமார் (RA2531021020178)**
**I B.Sc. CS w/s CYBER C SECTION**

இன்மைத் தமிழே என் உயிரே!
உன் பழமை அது தேர் கயிறே!
உன் புதுமை அது நெற் கதிரே!

உண்மையின் தோற்றம் நீயே!
வாழ்வியலின் மாற்றம் நீயே!

பழமையின் சிகரத்தில் நீயே!
உச்சரிப்பின் உயரத்தில் நீயே!

புலவர்களின் ஓசை நீயே!
குழந்தைகளின் ஆசை நீயே!

இனிமையான இசை நீயே!
தமிழர்களின் திசை நீயே!
பாரதியின் பாடல் நீயே!

பரதநாட்டியத்தின் ஆடல் நீயே!
சரியாத ஆலைமரம் நீயே!
உதிராத பூக்கள் நீயே!

தமிழுக்காகக் கைக் கட்டும் என் கரம்!
தமிழ் வளர என் உடலாகட்டுமே உரம்!

□□□□

# பெண் எப்போது பெண்ணாகிறாள்



**முனைவர் வெ. நளினி**

**உதவிப்பேராசிரியர் (தமிழ்)**

பெண்கள் நாட்டின் கண்கள். நம் பண்பாட்டில் பெண்கள் போற்றுதலுக்கு உரியவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். பெண்களின் வளர்ச்சியும் பாதுகாப்பும் இல்லாமல் ஒரு நாடு வளர்ச்சி அடையாது. தாய், தாரம், தமக்கை, எனப் பல்வேறு பரிணாமங்களையும், பல பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட பெண்களின் சிறப்புப் பற்றியும் எப்போது அவள் பெண்ணாகிறாள் என்பது பற்றியும் இப்பதிவில் காண்போம்.



உயிர்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பெண்ணே முதன்மையானவள் அப்படிப்பட்ட பெருமைகளை உடைய பெண் தற்காத்து, தன் சுற்றம் காத்து, தன் சமுதாயம் காக்கும் பொழுது தன்னைப் பெண்ணாக உணர்கிறாள்.

ஒரு பெண் உயிரையே பணயம் வைத்து கடும் வலியைத் தாங்கி ஒரு உயிரைப் பிரசவிக்கும் பொழுதுதான் தாய்மையின் மகத்துவத்தையும், பெண்மையின் பெருமையினையும் முற்றிலுமாக உணர்கிறாள்.

வரலாற்றுச் சான்றுகளின்படி அன்புடைய நெஞ்சம், கற்பு, மன உறுதி பொறுமை தூய்மை, தாய்மை, வாய்மை, மனத்திறன், விருந்தோம்பல் பெரியோரை மதித்தல், உபசரிப்பு போன்ற பண்புகளை உடையவர்களாகப் பெண்கள் சிறப்பிக்கப்படுகிறார்கள், அப்படிப்பட்ட சிறப்பிற்கு உரியவர்களாக அனைத்துக் கடமைகளையும் சரிவர செய்து முடிக்கும் பொழுது பெண் தன்னைப் பெண்ணாக உணர்கிறாள்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் உலகம் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்கும் என்றும் பாரதத்தில் புதுமைப்பெண்கள் தோன்ற வேண்டும் என்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார் பாரதியார், அப்பெருமகனாரின் வாக்கினை நிறைவேற்றும் வகையில் இன்று பெண்கள் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். அப்படிப்பட்ட சிறப்பிற்கு உரிய பெண்கள் மண்ணுலகத்தில் மட்டுமல்லாமல் விண்ணுலகத்திலும் தங்களது சாதனைகளை நிகழ்த்தும் பொழுது தன்னைப் பெண்ணாக உணர்கிறார்கள்.

புவியாளும் மன்னர்களும் கவியாளும் புலவர்களைப் போற்றினர் என்பது வரலாறு, அப்படிப்பட்ட புவியாளும் மன்னர்களுக்கு நல்லது தீயதை எடுத்துச் சொல்லும் ஆசானாக விளங்கும் பொழுதும் பெண் தன்னைப் பெண்ணாக உணர்கிறாள்.

ஒரு புதிய உயிரை உலகிற்குக் கொண்டு வருவதற்குத் தன் உயிரையும் பணயம் வைக்கிறாள் ஒரு பெண் எனில் அப்பெண் போற்றப்பட வேண்டும். இன்றைய சமுதாயச் சீர்கேடுகளைக் களைய வேண்டும் எனில் பெண்களை மதிக்கின்றவர்களாக ஆண் பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டும் அப்படிப்பட்ட ஒரு சிறப்பான சமுதாயத்தை உருவாக்கும் ஒவ்வொரு பெண்மணியும் தன்னைப் பெண்ணாக உணர்கிறார்கள் ஒவ்வொரு தருணத்திலும் வாழ்க பெண்கள், வாழ்க பெண்ணியம்.

□□□□

# கொலை – ஒரு கைவிடப்பட்ட சாட்சியம்
## (சிறுகதை)



**விமலன் (RA2531201020056)**
**BCom (GENERAL) – A SECTION**

குற்றவியல் பட்டப்படிப்பு படிக்கும் மாணவன் விமலன். அவன் தன் கல்வியில் மட்டும் இன்றி, காவல் துறையினருக்கும் பல சைபர் குற்றங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்து உதவி செய்து அவர்களின் நன்மதிப்பினையும் பெற்றவன் ஆவான். ஆனால், அவனுடைய வாழ்க்கையை ஒரு இரவு மாற்றியது.

அவனுடைய சிநேகிதன் கிஷோர் என்பவன் மர்மமான முறையில் அவன் தங்கியிருந்த விடுதியில் கொலை செய்யப்பட்டிருந்தான்.

சம்பவ இடத்தில் காவல்துறையினர் வந்து விசாரணை மேற்கொள்கையில், சிசிடிவி காமரா காட்சியில் கிஷோரின் அறைக்குக் கடைசியாக விமலன் சென்ற பதிவினைக் காண்கின்றனர். அதனால், கிஷோரின் கொலைக்கு முக்கிய சந்தேகமாக விமலன் கைது செய்யப்படுகிறான்.

விமலன் நடந்த சம்பவத்தினை ஊகித்து தன்னை யாரோ வேண்டும் என்றே இக்கொலையில் சிக்கவைத்ததை அறிகிறான். காவல்துறைக்குப் பல வகையில் விமலன்



உதவி செய்து இருந்தமையால், காவல் ஆய்வாளர் சிவா என்பவர் அவனை நேரில் சந்தித்து நடந்த சம்பவத்தைப் பற்றி விசாரித்தார். விமலன் நடந்த சம்பத்தைக் கூறிவிட்டு அவரிடம், “ஒரு நாள் அவகாசம் கொடுங்கள் சிவா… அந்தக் கொலையாளி யார்? என்று கண்டுபிடித்து, சட்டத்திற்கு முன்பு நிறுத்துகிறேன்” என்று உறுதியளித்தான்.

அதனால், சிவா அவனை நிபந்தனையின் பெயரில் விடுதலை செய்தார். விமலன் தன் உயிர் தோழி பிரார்த்தனாவைத் தொடர்பு கொண்டு, காவல் துறையினரின் உதவியோடு விசாரணையைத் தொடங்கினர்.

இவர்களின் இந்த விசாரணை சிலந்தி பின்னல் போல ஒரே இடத்தில் சேர்ந்தது. அந்த மர்ம நபர், ‘ப்ரொஃபெசர்’.

அந்த மர்ம நபர் ஒரு மிகப்பெரிய சைபர் குற்ற கும்பலுக்கு மையப்புள்ளி. அவர்களுடைய குற்றங்களை அறிந்த கிஷோர் தன்னிச்சையாக அவர்களைப் பின் தொடர்ந்து பல திடுக்கிடும் உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளான். அதை மறைக்கவே அவனை அந்த கும்பல் கொன்று அப்பழியை விமலன் மீது மாற்றியது.

அதை அறிந்து மனம் வருந்தினான் விமலன். அந்த மர்ப நபர் இருக்கும் இடத்தை விமலனின் தோழி, அவர்களின் நெட்வோர்க்கினை ஹேக் செய்து கண்டுபிடித்தாள். அது ஆளரவமற்ற ஒரு வேர்ஹவுஸ் இருக்கும் பகுதிக்கு அவர்களை அழைத்துச் சென்றது.

அங்கு விமலன், பிரார்த்தனா, மற்றும் காவல் கண்காணிப்பாளர் சிவா மூவரும் விரைந்து சென்றனர். அங்கே ஒரு நபர் முகமூடி அணிந்திருந்தான். அவன் விமலனை நோக்கி, “பிரமாதம் விமலன் ஆனா.. ரொம்ப தாமதமா வந்துட்ட…” பெருத்த ஒலியுடன் “பூம்” அந்த இடமே சிதறியது.

அடுத்த நாள் காலையில் ஒரு பத்திரிக்கையில், அந்த மர்ம நபர் ‘ப்ரோஃபெசர் தப்பித்து விட்டார். அவர்களைக் காவல் துறையினர் தீவிரமாகத் தேடி வருகிறார்கள்’

□□□□

# விழுமியம் போற்றும் தமிழ்மொழிக் கல்வி



**முனைவர் க. சித்ரா**

**உதவிப்பேராசிரியர் (தமிழ்)**

பழந்தமிழகத்தில் கல்வி முறை மொழி, பண்பாடு, கலைகள் சார்ந்ததாக இருந்தது. மொழியையும் வீரக்கலைகளையும் மாணவர்கள் குருவிடம் சென்று கற்று வந்தனர். திண்ணைப்பள்ளிகள் கல்விக் கூடங்களாகச் செயல்பட்டன. ஓலைச்சுவடிகள் வழி இலக்கியத்தையும் மொழியையும் பண்பாட்டையும் வரலாற்றையும் மனனக்கல்வியாக மாணவர்கள் கற்றனர். வாணிபம், மொழி, இலக்கணம், மருத்துவம், கணிதம், வானியல், கலைகள் என ஒரு சில குறிப்பிட்ட துறைகள் மட்டுமே கல்வித்தளத்தில் பயிற்றுவிக்கப்பட்டன. கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் இருந்தது.

**கற்கை நன்றே கற்கை நன்றே**

**பிச்சை புகினும் கற்கை நன்றே. (வெற்றி வேட்கை)**

என்ற தொடர் கல்வியை அனைவருக்கும் வலியுறுத்துவதாக உள்ளது. மனிதனின் அழிவுக்குக் காரணம் சமூகத்தில் நிகழும் குற்றங்கள். குற்றங்கள் நிகழ்வது பழி, பகை, கோபம், பொறாமை, காழ்ப்புணர்ச்சி உள்ளிட்ட தீய பண்புகளால். தீய பண்புகள் வளர்வதற்குக் காரணம் அறியாமை. அறியாமையை வேரறுக்கும் மிகச்சிறந்த ஆயுதமாக நம் முன்னோர் கைக்கொண்டது கல்வி.

**எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்வி போல்**

**மம்மர் அறுக்கும் மருந்து. (நாலடியார் - 132)**

என்ற தொடரை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

கல்வி கற்ற ஒருவனுக்கு எந்த நாடும் எந்த ஊரும் சொந்தமாகும் என்கிறார் வள்ளுவர். (யாதானும் நாடாமால் ஊராமால். குறள். 397) மனித ஏற்றத்தாழ்வுகளைக் களைவது கல்வி. ஆகையால்தான் பழந்தமிழகத்தில் நாட்டை ஆளும் மன்னனைக் காட்டிலும் கல்வியாளன் உயர்வாகப் போற்றப்பட்டுள்ளான்.

**"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"** என்ற தொடர் கல்வியின் மகத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

**பழங்காலக் கல்வி தந்த உயரிய மானுடப் பண்புகள்:**

பழந்தமிழ்ச் சமூகம் இலக்கியம் மூலம் மானிடரை வழிப்படுத்தியது. வாழ்வின் உயரிய இலக்குகளை அடையும் நோக்குடன் இயற்றப்படுபவை இலக்கியங்கள். மனிதன் ஒருவனுக்குப் புகழைத் தரும் உயரிய ஒழுக்கங்களையும் அவை பதிவுசெய்கின்றன.

எழுத்து, இலக்கியம் என்ற தளத்தில் இயங்கிய புலவர் தொழிலால் அக்காலச் சமூகம் பயன்பெற்றது. பல இடங்களுக்கும் பயணப்பட்ட புலவர்கள் மனித வாழ்வியலையும் உலக இயல்புகளையும் நன்கு உணர்ந்திருந்தனர். அக்காலப் புலவர்கள் தந்த இலக்கியப் படைப்புகளே அதற்குச் சான்றாகின்றன. மனிதனின் அக வாழ்வையும் புற வாழ்வையும் முறையாக வகுத்து அவ்விரு தளங்களிலும் மேம்பட்ட விழுமியங்களையும் இலக்காகக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியங்கள் பிற்காலச் சமூகத்திற்கு அளித்த கொடை ஏராளம். கல்வியாளராகிய புலவர்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் அத்துணை வளர்ச்சி பெறாத காலத்தில் எழுதுவதற்கான சாதனங்களைத் தேடித் தேடித் தாம் கற்ற, பெற்ற அறிவினைப் பதிவு செய்துள்ளனர்.

ஓலைச்சுவடிகள், எழுத்தாணிகள், கல்வெட்டுகள், செப்பேடுகளெனத் தங்களுக்குக் கிடைத்த வளங்களை அறிவுப்பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். வாழ்வியலையும் உயர்ந்த வாழ்க்கைக்கான விழுமியங்களையும் வருங்காலம் அறியப் பதிவிட்டுள்ளனர்.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல்:**

உலகம் அனைவருக்கும் பொதுவானது. உலக வளங்கள் அனைத்து உயிர்களுக்கும் சமமாகப் பகிரப்படாததால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உருவாகின்றன. வலிமை உள்ளவன் அளவுக்கு அதிகமாகவும் எளிமையானவன் வறிய நிலையிலும் வளங்களை அனுபவிக்கிறான். இந்த இடைவெளி மேலும், அதிகரிப்பதால் தனிமனித வறுமை நிலையானது குடும்பம், இனம், வட்டம், மாநிலம், நாடு என எல்லை விரிவடைந்து வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள், வறுமை நாடுகள் என்ற நிலை உருவானது.

இன்று பொருளாதார இடைவெளி சமூகத்தில் மிகப்பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. பழந்தமிழகத்தில் இத்தகையப் பொருளாதார இடைவெளி இருந்தமையை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. பாணர்கள், புலவர்கள்

போன்றோரின் வறுமைநிலையைச் சங்க இலக்கியங்கள் பதிவிட்டுள்ளன. இத்தகைய நிலையைப் போக்க பொருளாதாரத்தையும் வளத்தையும் பகிர்ந்து கொடுக்கும் வழக்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் நூலோர்**

**தொகுத்தவற்றுள்ளும் எல்லாம் தலை. (குறள்.322)**

என்று பகிர்தலை அறங்களிலெல்லாம் தலையாய அறமாக வள்ளுவர் குறிப்பிடுகிறார். தனக்கென வாழாமல் பிறர் நலன் கருதி வாழும் சமூகம் உலக வரலாற்றில் நிலைத்திருக்கும் என்பதற்குத் தமிழினமே சான்று.

**உண்டாலம்ம இவ்வுலகம்**

**தமக்கென வாழா நோன்தாள்**

**பிறர்க்கென முயலுநர் உண்மையானே. (புறம். பா. 182)**

என்ற சுயநலம் இல்லாது பிறர் நலன் பேணும் மனிதரால்தான் இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. ஈகை, கொடை, விருந்தோம்பல் எனப் பலநிலைகளில் கொடுப்பதை வலியுத்தி வந்துள்ளது தமிழ்ச் சமூகம். கொடுத்ததால் புகழ் பெற்று விளங்கிய வள்ளல்கள் இன்றைய தலைமுறைக்கும் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர்.

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, மயிலுக்குப் போர்வை தந்த பேகன், புலவர் ஔவைக்கு ஆதரவு தந்த அதியமான் உள்ளிட்ட கடையேழு வள்ளல்கள் இன்றும் அழியாப்புகழ் பெற்று விளங்குகின்றனர். சேர்த்து வைக்கும் செல்வம் பிறர்க்கு ஈவதாலேயே பயன்பெறுகிறது என்ற உயரிய சிந்தனை தமிழ்ச் சமூகம் அளித்த அறிவுக்கொடை.

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**

**செல்வத்துப்பயனே ஈதல் (புறம். பா.189)**

கொடை செல்வந்தர்களுக்கு வலியுறுத்தப்பட்ட பண்பு எனில் விருந்தோம்பல் இல்லறத்தார்க்கு வலியுறுத்தப்பட்டது. வாழ்வின் எந்நிலையில் இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் உணவாகவோ, பொருளாகவோ கொடுப்பதைத் தமிழ்ச் சமூகம் அடுத்த தலைமுறைக்குக் கற்றுத் தந்துள்ளது. கொடுப்பது மனிதரின் விழுமியப்பண்பு. அப்பண்பினை உடையவன் உயர்புகழினை அடைவான் என்பதைக் கீழ்க்காணும் குறள் பதிவுசெய்கின்றது.



**தன்னுயிர் தான் அறப்பெற்றானை ஏனைய**

**மன்னுயிர் எல்லாம் தொழும். (குறள். 268)**

சுயநலமற்ற மனிதனின் பொதுநல உணர்வினால் வெளிப்படும் உயர்ந்த பண்பே ஈதல். அத்தகைய அருட்குணத்தை உடைய மானிடரை உலக உயிர்கள் வணங்கும் என்பதை வள்ளுவர் இக்குறள் வாயிலாக எடுத்துக்காட்டுகின்றார்.

**ஒற்றுமையும் ஒருமைப்பாடும்**

“யாதும் ஊரே யாவரும் கேளிர்”என்று மனித ஒருமையைப் போற்றுகிறது புறநானூறு. மனிதர் ஒருவரோடு ஒருவர் முரண்படுவதற்குக் காரணம் தனக்கு ஏற்படும் துன்பம் இன்னாரால் வந்ததென்று கருதி பிறரோடு அன்பு நிலையிலிருந்து விலகுவது. ஆகையால்தான் “தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்ற வாழ்வியல் தத்துவத்தையும் சேர்ந்தே பதிவு செய்கிறது அந்நூல். தன்னுடைய நிலைக்குப் பிறரைக் காரணம் காட்டும் இடத்தில் ஒற்றுமைக்கும் அன்புக்கும் இடமில்லை. இத்தகைய உயரிய சிந்தனைகள் எல்லாம் இலக்கியக் கல்வி வாயிலாகவே ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்த பிற்காலத் தலைமுறையினருக்குக் கடத்தப்படுகிறது.

மக்கட்தொகை அதிகம் உள்ள நாடுகள் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மிக முக்கிய காரணமாக அமைவது மனித வளம். மனித வளம் பலம் பெற்றதாக அமைய ஒற்றுமை வழிவகுக்கும். “ஒற்றுமையே பலம்” என்ற தொடர் குழந்தைப் பருவம்முதல் மனிதரிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இனம், மதம், மொழி இவற்றால் வேறுபட்டிருக்கும் இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடாக விளங்குகிறது. மனித வளத்தை முறையாகப் பயன்படுத்தினால் இந்தியாவும் சீனா போன்ற நாடுகள்போல வளர்ச்சி அடைந்த நாடாக மாறலாம். திருவள்ளுவர் மனித வளத்தை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து திருக்குறளில் எடுத்துக்காட்டுகிறார்.

**வசை இலா வன்பயன் குன்றும் இசையிலா**

**யாக்கை பொறுத்த நிலம் (குறள். 239)**

ஒரு மனிதன் தன் திறன்களால் மேன்மை பெறுவது நாட்டின் வளம் சார்ந்தது என்பதை இக்குறள் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. புகழ் பெறாமல் வாழ்வைக்

கழித்தவருடைய உடம்பைச் சுமந்த நிலம் வசையற்ற வளமான பயனாகிய விளைவு இல்லாமல் குன்றி விடும் என்று குறிப்பிடுகின்றனர்.

மனித வள மேம்பாட்டிற்குரிய அடிப்படைக் காரணிகளுள் ஒன்று ஒற்றுமை உணர்வு.

**ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே**
**இந்த ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்.**

**(தேசிய கீதங்கள்- வந்தே மாதரம்)**

என்று பாரதியார் ஒற்றுமையை வலியுறுத்தினார். ஒருமைப்பாட்டுணர்வை இலக்கியக்கல்வி வாயிலாக எட்டும் முயற்சி காலம் காலமாக இருந்து வந்துள்ளதை இதன் வழி அறியமுடிகிறது.

□□□□

# GenZ தலைமுறை!



**V. பிரியங்கா**
**RA2531242020004**
**I BCA DSA**



சரியான காரணம் தெரியவில்லை?
சோகம் இல்லை…
எனினும் இதழின் சிரிப்பு இல்லை…
பாடல்கள் கேட்டாலும் மனதில் கனம் குறையவில்லை…
யார் மீதும் வருத்தம் இல்லை…
அதே சமயத்தில் யார் மீதும் வெறுப்பும் வரவில்லை…
நினைப்பவர்களை மறந்ததும் இல்லை…
மறந்தவர்களை நினைத்ததும் இல்லை…
யாரிடமாவது பேசிப் பார்க்கலாம் என்றால்…
என்ன பேசுவது என்று தெரியவில்லை…
இமைகளை மூடினாலும் கண்களில் தூக்கம் இல்லை…
மனதில் நிம்மதி இல்லை…
காரணம் என்னவோ தெரிய வில்லை
இதுதான் **GenZ தலைமுறையோ?**

□□□□

# சேலை – பாரம்பரியம்



**முனைவர் ம. திவாகர்**
**உதவிப்பேராசிரியர்( தமிழ்)**

தமிழ்நாடு என்றாலும் தமிழர்கள் என்றாலும் முதன்முதலில் அனைவர் நினைவிலும் வருவது அவர்களின் பாரம்பரிய ஆடையான சேலைகள்தான். சேலைகளைத் தங்களுடைய கலாச்சார அணிகலனாக மாற்றியவர்கள் தமிழர்கள்.

தமிழ்நாடு தவிர மற்ற மாநிலங்களும் சேலைக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் சேலை என்றாலே அனைவரின் மனத்திலும் தமிழகம் நினைவுக்கு வருவதைத் தவிர்க்கவே முடியாது. தமிழகத்துச் சேலைகளில் பல வகைகள் இருக்கின்றன.

**தமிழ்நாட்டின் சேலை வகைகள்**

பல்வேறு வித மனிதர்கள் வாழும் தமிழகத்தில் சேலை வகைகளும் பலவகையானவை. பட்டுச்சேலை முதல் செட்டிநாட்டுப் சேலைகள் வரை தமிழ்நாட்டின் சேலை வகைகள் சிறப்பான தோற்றம் தருபவை.

**காஞ்சிபுரம்** பட்டுச் **சேலைகள்**

இந்த வகைப் சேலைகள் இந்தியாவுக்கே பெருமை தேடித்தருபவை. வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு ஏற்றுமதி ஆவதிலும் முதலிடத்தைப் பிடித்திருக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் நமது தமிழகத்தில் உள்ள காஞ்சிபுரம் எனும் ஊரில் தயார் ஆகிறது. பல கைவேலைப்பாடுகள், கலைநுணுக்கங்கள் கொண்ட சேலைகள் இந்தியாவின் பெருமை.

**இராசிபுரம் சேலைகள்**

இராசிபுரம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர். அங்கே கைத்தறி நெசவுகளும் பட்டுத்தறிகளும்தான் குலத்தொழில். நிறைய நெசவாளர்களைத் தன்னகத்தே கொண்ட ஊரில் கைத்தறிச் சேலைகளில் நெசவாளர்களின் கைவண்ணம் நம்மை

ஆச்சரியப்படுத்தும். பட்டுச்சேலைகளிலும் காஞ்சிபுரம் சேலைக்கு நிகரான தரத்தை இவர்கள் வழங்குகிறார்கள்.

தமிழ்நாட்டுத் திருமணங்கள் எப்போதும் சேலைகளால் நிறைந்திருக்க கடவது என்று யாரோ ஆணையிட்டு விட்டதைப் போல இன்றும் நம் தமிழ்த் திருமணங்களில் பட்டுச்சேலைகள் தான் முன்னிலை வகிக்கின்றன. அதிலும் டிசைனர் சேலைகள், பியூஷன் சேலைகள் எனப் பல விதமான சேலைகள் வந்திருக்கின்றன.

இதனைத் தவிர இப்போதெல்லாம் வடஇந்தியர்கள் போல லெஹன்கா அணியும் கலாச்சாரமும் வழக்கத்தில் இருக்கிறது. ஆனாலும் பாரம்பரிய திருமணச்சேலைகள் என்றாலே அது தமிழகம்தான்.

**டிசைனர் சேலைகள்**

கலாச்சாரம் வளர வளர சேலை நெசவுகளில் புதுமைப் புகுத்துவது எல்லா நாடுகளிலும் வழக்கம். ஆகவே, அதற்காகவே டிசைனர் சேலைகள் தயார் ஆனது. எம்ப்ராய்டரி முதல் கண்ணாடி வேலைப்பாடுகள் வரை கலையின் கைவண்ணத்தைப் சேலையில் காட்டினார்கள். மனித கற்பனை திறனையும் அவர்கள் உழைப்பையும் நேரத்தையும் இந்த டிசைனர் சேலைகள் அதிகம் எடுத்துக் கொள்வதால் அதிக விலை தரவேண்டி இருக்கிறது. ஆனாலும், அணிபவரை அழகாக்கும் அற்புதம் வாய்ந்தது.

**கோவைப் பருத்திச் சேலைகள்**

கோவை காட்டன் சேலைகள் எப்போதுமே தனிச் சிறப்பு வாய்ந்தவை. அணிந்து கொள்ள மிருதுவாகவும் சருமத்திற்கு நண்பனாகவும் இருக்கும் இந்த

சேலைகளின் தரம் பல வருடங்களுக்கு நிலைக்கும். தென்னிந்தியாவின் மான்செஸ்டரான கோவையில் பருத்தி உற்பத்தி ஆகிறது என்பது சிறப்பு செய்தி. உற்பத்தி ஆகும் இடத்திலேயே தயாரிக்கப்படும் சேலைகள் தரத்திற்கான உத்தரவாதம் மற்றும் விலைமலிவு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

**நெகமம் சேலைகள்**

பொள்ளாச்சிக்கு அருகில் இருக்கும் சிறிய கிராமத்தில்தான் தமிழகமெங்கும் உள்ள ஆடைக் கடைகளுக்குப் சேலைகள் தயார் ஆகின்றன. இங்கே விற்கப்படும் கிராமத்துப் பருத்த சேலைகள் மற்றும் அதன் தனித்துவமான டிசைன் பெரியவர்கள் அணிய மிருதுவாக இருக்கும் தன்மை ஆகியவையால் சேலைகள் என்றால் நெகமம் சேலைகளை நாம் தவற விட முடியாது.

**சேலம் சேலைகள்**

சேலம் சேலைகளைப் பருத்தியில் பல்வேறு வண்ண சாயங்கள் சேர்த்து பியூஷன் முறையில் புதுமையைப் புகுத்துவார்கள் சேலத்து நெசவாளர்கள். அதேசமயம் தரம் பல வருடங்கள் நிலைக்கும். பிளைன் சேலையில் ஜரிகை பார்டர் அல்லது கட்டம் போட்ட செக்ட் காட்டன் சேலைகள் இவர்கள் சிறப்பம்சம்.

**சுங்கிடி சேலைகள்**



சுங்கிடி சேலைகள் தமிழகத்தின் பின்னிப் பிணைந்த பாரம்பரிய சேலைகளில் ஒன்று. இதில் பல்வேறு விதமான வகைகள் இருக்கின்றன. மதுரை சுங்கிடி இதில் பிரபலமானது. மிக அடர்த்தியாக நெய்யப்பட்ட நெசவுகளில் இந்தப் சேலைகள் இருக்கும். அடர் வண்ணங்கள் இதன் சிறப்பம்சம். கோயில்கள் செல்ல இவ்வகை சேலைகள் சரியான தேர்வாக இருக்கும்.

**சின்னாளப்பட்டுச் சேலைகள்**

இந்த வகை சேலைகள் பட்டுப் சேலைகளுக்கு மாற்றாக வந்த சேலைகள். முழுதும் ஜரிகைகளாலேயே நெய்யப்பட்டிருக்கும் ஆனாலும் பட்டுச் சேலை போன்ற தரம் இருக்காது என்பதால் இதன் விலை பட்டுப் சேலைகளை விடவும் மிகக் குறைவு. அணிவதற்குச் சௌகர்யமாகவும் இருக்கும். ஏழைகளின் பட்டுப்சேலை சின்னாளப்பட்டு. இந்த ஊர் திண்டுக்கல் அருகே இருக்கிறது.

**மதுரை காட்டன் சேலைகள்**

மதுரையில் நெய்யப்படும் காட்டன் சேலைகள் மதுரை காட்டன் என அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் இரண்டு நிறங்கள் மட்டுமே இதில் இணைந்திருக்கும். அதன் முடிவில் ஜரிகை பார்டர் சேர்த்திருப்பது சேலைக்கு அழகை அதிகரிக்கும். அடர் நிற சேலைக்கு வெளிர்நிற பார்டர்கள் வெளிர்நிற சேலைகளுக்கு அடர்நிற பார்டர்கள் என மாற்றி மாற்றி கொடுத்திருப்பது இதன் சிறப்பு.

**செட்டிநாடு சேலைகள்**

காரைக்குடி பக்கம் உள்ளவர்கள் நெய்யும் இந்தச் செட்டிநாடு சேலைகள்தான் இப்போதைய நாகரிகமாக இருக்கிறது. செட்டிநாடு சேலைகள் பருத்தியில் நெய்யப்பட்ட அதேசமயம் பார்டர்களில் கலைவண்ணம் காட்டக் கூடிய சேலைகள். இப்போது புத்தர் முகம் மற்றும் தஞ்சாவூர் சிற்பங்கள் ஆகிய பல கலைசிறப்புகளை இந்தச் சேலைகள் தன்னகத்தே கொண்டிருக்கின்றன.

**சில்க் காட்டன் சேலைகள்**

தென்னந்தியாவின் மான்செஸ்டர் ஆன கோவையில் பட்டு மற்றும் பருத்தி இரண்டையும் ஒன்றாக நெய்து அதனைச் சில்க் காட்டன் சேலைகள் என அழைக்கின்றனர். இவ்வகை சேலைகள் உலக அளவில் பிரபலமானது. பட்டைப் போல ஆடம்பரமும் இருக்காது அதேசமயம் பருத்தியைப் போல எளிமையும் இருக்காது. இரண்டிற்கும் நடுவிலான தோற்றத்தைத் தருவதால் இவ்வகைச் சேலைகள் பெண்களின் பெருமையாகப் பார்க்கப்படுகிறது.

□□□□

# காலத்தை மீறும் காதல்

**(சிறுகதை)**



**கிரித்திக் காந்த் எஸ். ஆர். (RA2531022020065)**

**I B.Sc. AIML B**

ஒரு சிறிய கிராமத்தில் சாத்தன் என்ற ஏழை ஒருவன், நல்ல மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் சிறுவயதில் பெற்றோரை இழந்ததால் தனியாகவே வாழ்ந்து வந்தான். தன் வீட்டின் அருகே அவனுக்கென இருந்த நிலத்தில் சிறுசிறு பயறுவகைகளை விதைத்து அறுவடை செய்து வந்தான். அதனை விற்று பொருளாதாரத்தை வளர்த்துவந்தான்.

ஒரு சமயம், அவனுடைய வழக்கமான வாழ்க்கையில் சந்தை ஒன்றில் ஒரு அழகிய பெண்ணைக் கண்டான். அவள் பெயர் மாதவி. அவளது சிரிப்பும் கண்களில் நற்குணமும் அவனுடைய மனதினைக் கவர்ந்தது.

அவனது மனம் அவளையே பின்பற்றி சுற்றியது. அடுத்த இரண்டு வாரங்கள் சாத்தன் இரகசியமாக மாதவியைப் பின் தொடர்ந்து வந்தான். ஒரு நாள் இதனைக் கவனித்து வந்த மாதவி, அவனை நோக்கி, "நீ…! ஏன் என்னைப் பின் தொடர்ந்து வருகிறாய்?" என்று கேட்டாள்.

சாத்தன் தைரியமாகச் சொன்னான். "மன்னித்துவிடு, நான் தனிமையில் வாழ்கிறேன். உன்னைக் கண்டபோது ஓர் இனம் புரியாத உணர்வினை உணர்ந்தேன்." என்றான். அவள் பிறகு அவனிடம் தனது பெயரை, மெதுவாக என் பெயர், மாதவி என்றாள்.

நட்பு பூத்தது!

அதன் பிறகு அவர்கள் அடிக்கடி சந்தித்து பேசத்தொடங்கினர். நட்பு காதலாக மலர்ந்தது. கிராம மக்களின் ஆசீர்வாதத்துடன் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். ஒரு மகிழ்ச்சியான ஆரம்பம். வாழ்க்கை இருவருக்கும் அழகானதாக மாறியது. மாதவி, சாத்தன் இருவரும் மகிழ்ச்சியாக வாழ்வினை நடத்தினர்.



விதியின் திருப்பம்.

ஒரு நாள் சாத்தன் கடுமையாக நோயுற்றான். மருத்துவர் சாத்தனின் உடல் நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று மாதவியிடம் கூறினார். மாதவி இரவும் பகலும் அவனைக் கவனித்து வந்தாள். சாத்தன், மாதவியின் கைகளைப் பிடித்து, "நான் சென்றாலும், என் உனக்கான காதல் என்றென்றும் வாழும்" என்று கூறினான். கண்கள் நீர் வடித்தன.

அதுதான் அவனுடைய கடைசி வார்த்தைகள் ஆகும். அந்த வார்த்தைகளோடு அவனுடைய கண்களை மூடினான். சாத்தனுக்குப் பிறகு வாழ்க்கை.

மாதவியின் மனம் உடைந்தது. மாதவி அவனுடைய நினைவுகளை உயிரோடு வைத்துக்கொள்ள தீர்மானித்தாள். அவள், கிராமத்து ஏழை குழந்தைகளுக்கு உதவி செய்தாள், கல்வி கற்பித்தாள்.

அவளது கருணையும், சேவையும் கிராம மக்களுக்கு உண்மையான காதலின் அடையாளமாக மாறியது.

□□□□

# தமிழ்ப்பொருள் அகராதி



**முனைவர் சி. இராமாமிர்தம்**

**உதவிப்பேராசிரியர் (தமிழ்)**

பாம்பு – அரவு, அரவம், மாசுணம்

சிங்கம் – அரிமா, மடங்கல், ஆளி

நண்டு - அலவன்

அருகம்புல் – அறுகு, அறுகை

பலா – ஆசினி, வருக்கை

வண்டு – இளி, மா

கடுகு - ஐயவி, கடிப்பகை

நரி - ஓரி

மிளகு - கருங்கொடி

பருந்து - கருடன், கலுழன்

மான் - பிணை, கலை, உழை

அசோகமரம் - பிண்டி

காரி - பிள்ளை

சுறா - மகரம், கோட்டு

மூங்கில் - காம்பு, அமை

ஆம்பல் – குமுதம்

ஆந்தை – கூகை

குவளை - செங்கழுநீர், நீலோற்பம்

கயல்மீன் - சேல், செங்கயல்

வெற்றிலை - திரை, முகவாசம்

நத்தை – நந்து

கரும்பு - வேழம்,கழை

யானை - பகடு, போதகம்

குதிரை - பாய்மா, புரவி

மயில் – மஞ்ஞை

குருக்கத்தி - மாதவி, கத்திகை

குரங்கு - முசு, பிணவு, மந்தி, வானரம்

□□□□

## நாங்களும் மனிதர்கள்தான்



**ஆர்த்தி. ஜே (RA2531204020065)**
**Ist BCom ISM B**

பிச்சைக்காரர்களின் வாழ்க்கை என்பது சமூகத்தின் மறக்கப்பட்ட, மரணப்பட்ட ஒரு பகுதியாகும். இதற்கு அவர்கள் எதிர்கொள்ளும் வறுமைகள், துன்பங்கள், மற்றும் எதிர்பார்ப்புகள் உதாரணமாக உள்ளது.

### பிச்சைக்காரர்களின் தினசரி வாழ்க்கை

பிச்சைக்காரர்கள் பெரும்பாலும் நகர சாலைகளில், கோயில்கள் அருகிலும், பேருந்து நிலையங்களிலும் வாழ்கிறார்கள். அவர்கள் பலர் உடல் நலனற்றவர்களாகவோ, வயதானவர்களாகவோ, அல்லது வேலைவாய்ப்பின்றி இருக்கிறவர்களாகவோ இருக்கிறார்கள். சில பிச்சைக்காரர்கள் பட்டதாரிகளாக இருந்தும் வேலைவாய்ப்பு இல்லாததால் பிச்சை எடுக்க நேர்ந்தது என்பதும் கவலைவாய்ந்த உண்மை.



### சமூகப் பார்வை மற்றும் சவால்கள்

பிச்சைக்காரர்கள் மீது சமூகத்தில் பல கண்ணோட்டங்கள் உள்ளன. சிலர் அவர்களுடன் சண்டையிடுகிறார்கள்; சிலர் உதவுகிறார்கள். மனிதாபிமானம் மற்றும் சமூக நீதி இவை பிச்சைக்காரர்களின் வாழ்க்கையை மாற்றும் முக்கியக் கருவிகள்.

### தினசரி சவால்கள்

வெப்பம், மழை, குளிர் போன்ற வானிலை மாற்றங்களை நேரடியாக எதிர்கொள்கிறார்கள். பாதுகாப்பற்ற சூழலில் தூங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. பொது இடங்களில் பிச்சை எடுக்கும் போது, அவமதிப்பு, வன்முறைகூட நடக்கிறது.

**வாழும் இடம்**

பெரும்பாலான பிச்சைக்காரர்கள் கோயில்கள், சிக்னல் பகுதிகள், கட்டடங்கள் போன்ற இடங்களில் தங்குகிறார்கள். தூய்மை மற்றும் பாதுகாப்பு இல்லாத சூழலில் வாழ்வது, அவர்களின் உடல்நலத்தையும் மனநலத்தையும் பாதிக்கிறது.

**உணவு நிலை**

உணவு கிடைக்கும் நிலை அதிர்ச்சிகரமானது. சிலர் மீத உணவுகளை உண்கிறார்கள், சிலர் பசியால் தவிக்கின்றனர். ஆரோக்கியமற்ற உணவுகள் உடல்நலக்குறைவுகளை ஏற்படுத்துகின்றன. இதைச் சார்ந்த நோய், இரத்த அழுத்தம், உடல் பருமன் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

**உடல்நலம்**

மருத்துவ சேவைகள் அவர்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. தொற்றுநோய்கள், தலைவலி போன்ற பிரச்சனைகள் அதிகம். அவர்களில், மனநலம் பாதிக்கப்பட்ட நிலை அதிகம் காணப்படுகிறது, குறியீடாக தனிமை மற்றும் அவமதிப்பு காரணமாக இவை ஏற்படலாம்.

**பிச்சைக்காரர்களுக்கான தீர்வுகள்**

1. மறுவாழ்வு மற்றும் தங்குமிடம்

   பாதுகாப்பான, சுத்தமான தங்குமிடங்கள் அரசு மூலம் வழங்கப்படுதல். SMILE திட்டம் மூலம், பிச்சைக்காரர்கள் தனிமை இல்லாமல், மரியாதையுடன் வாழும் சூழல் உருவாக்கப்படுதல்.

2. மருத்துவ சேவைகள் மற்றும் மனநல ஆதரவு

   இலவச மருத்துவ பரிசோதனைகள், மனநல ஆலோசனைகள், மற்றும் அவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படுதல். தொற்று நோய்கள், மன அழுத்தம் போன்ற பிரச்சனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துதல்.

3. திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு

   தையல், சமையல், மர வேலை போன்ற தொழில்முனைவோர் பயிற்சிகள் வழங்கப்படுதல். இதன் மூலம், பிச்சைக்காரர்கள் சமூகத்தில் தங்களை நிலைநிறுத்தி வாழ்க்கையை விட்டு வெளியே வர முடியும்.

4. அடையாள ஆவணங்கள்

ஆதார், வோட்டர் ஐடி போன்ற அடையாள ஆவணங்கள் இல்லாததால், பலர் நலத்திட்டங்களை பெற முடியவில்லை. அவை அவர்களை வந்து சேர்தலை உறுதிப்படுத்துதல்.

5. SMILE திட்டம் மூலம், இவை வழங்கப்படுகின்றன.

6. சட்டப் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள்

இந்திய அரசியலமைப்பின் 21வது பிரிவு (Article 21) மூலம், பிச்சைக்காரர்களுக்கும் மரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உயிரிழப்பு, தவறான நடத்தைகள் குறித்து விசாரணை நடத்த அரசு கட்டாயப்படுத்தி உள்ளது.

**முடிவுரை**

பிச்சைக்காரர்களின் வாழ்க்கை மாற்றம், அரசு, சமூக அமைப்புகள், மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்பட்டாலே சாத்தியம். ஒரு சிறிய உதவி, ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

□□□□

# நிறமும் சுவையும்



**முனைவர் சு.பலராமன்**
**உதவிப்பேராசிரியர் (தமிழ்)**

தாத்தா தந்த தேன் மிட்டாய்
சிவப்பு நிறத் தேன் மிட்டாய்
சுவைத்தேன் சுவைத்தேன்
அது இனிப்போ இனிப்பு
இனிப்போ இனிப்பு



பாட்டி தந்த கத்தரிக்காய்
நீல நிறக் கத்தரிக்காய்
சுவைத்தேன் சுவைத்தேன்
அது துவர்ப்போ துவர்ப்பு
துவர்ப்போ துவர்ப்பு



அம்மா தந்த எலுமிச்சை
மஞ்சள் நிற எலுமிச்சை
சுவைத்தேன் சுவைத்தேன்
அது புளிப்போ புளிப்பு
புளிப்போ புளிப்பு



அப்பா தந்த பாகற்காய்
பச்சை நிறப் பாகற்காய்
சுவைத்தேன் சுவைத்தேன்
அது கசப்போ கசப்பு
கசப்போ கசப்பு



அக்கா தந்த மிளகு
கறுப்பு நிற மிளகு
சுவைத்தேன் சுவைத்தேன்
அது கார்போ கார்ப்பு
கார்ப்போ கார்ப்பு



அண்ணன் தந்த உப்பு
வெள்ளை நிற உப்பு
சுவைத்தேன் சுவைத்தேன்
அது உவர்ப்போ உவர்ப்பு
உவர்ப்போ உவர்ப்பு



# நன்றி

CHENNAI RAMAPURAM

SRM

INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்,
இராமாபுரம், சென்னை - 89.



# அறிவியல் மற்றும் மனிதநேயவியல் புலம்,

# தமிழ்த்துறை